# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**

**சுற்றறிக்கை எண் 27/2014** **நாள் : 27/12/2014**

**பெறுநர்**

அனைத்து நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்
மாநில செயற்குழு உறுப்பினர்கள்

அன்பான தோழரே,

வணக்கம்,

அனைவருக்கும் இனிய கிறிஸ்மஸ், புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

மின்சார சட்டம் 2003 ல் மின்வாரிய ஊழியர்கள், மின் நுகர்வோர்கள் மாநில அரசின் உரிமைகளை பறிக்கும் வகையில் திருத்தங்களை நாடாளுமன்றத்தில் குளிர் காலக் கூட்டத்தொடரில் கொண்டு வருவதை கண்டித்தும், அம்முயற்சியை கைவிடப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும் 8.12.2014 அன்று டெல்லியில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழகத்திலிருந்து கலந்து கொண்ட அனைவருக்கும் மின் ஊழியர் மத்திய அமைப்பு தனது வாழ்த்துக்களையும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

8.12.2014 அன்று ஆர்ப்பாட்டத்திற்கிடையே தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மத்திய எரிசக்தி துறை அமைச்சர் மாண்புமிகு பியூஸ் கோயல் அவர்களை சந்தித்து மின்சார சட்டம் 2003ல் முன்மொழிய உள்ள மாற்றங்களை திரும்பப் பெற வேண்டும் என்ற கேட்ட போது பாரதப்பிரதமர் இந்திய மின் துறையில் பன்னாட்டு முதலாளிகளுக்கு திறந்து விட போகிறோம் வெளிநாட்டில் முழங்கியதை நிறைவேற்றுவதற்குத்தான் நான் இருக்கிறேன். இந்த பின்னனியில் முன்மொழிந்துள்ள திருத்தங்களை சட்டமாக்குவது தான் எனது முதல் பணி என்றும் அதன் அடிப்படையில் இன்னும் சில தினங்களில் நாடாளுமன்ற மக்களவையில் முன் மொழியப்படும் அதை தடுக்க இயலாது என்று கூறியதன் அடிப்படையில் 19.12.2014 ல் மாற்றங்கள் முன் மொழியப்பட்டன.

முன் மொழியப்பட்ட மாற்றங்கள் சட்டமானால் காசு உள்ளவர்களுக்கே மின்சாரம் என்ற நிலையும், அதன் மூலம் மின்சாரத்துறை கார்ப்பரேட்டுகளில் கொள்ளைக்களமாக மாறிவிடும் என்பதை உணர்ந்த இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பு, சட்டத் திருத்தத்தை வாபஸ் வாங்கு என்ற முழக்கத்தோடு 23.12.2014 அன்று கருப்பு தினமாக கடைப்பிடிக்க வேண்டும் என்று அறைகூவல் விட்டது. தமிழகத்தில் அது கூட்டு இயக்கமாக மாற்றப்பட்டு தமிழ்நாடு முழுவதும் கருப்பு தினத்தை யொட்டி மின் வாரிய ஊழியர்கள், தொழிற்சங்கங்கள் பாரதப்பிரதமருக்கு தீர்மானத்தை அனுப்புவது என்ற முடிவில் அடிப்படையில் இத்தோடு இணைக்கப்பட்ட தீர்மான நகல் மத்திய சங்கத்திலிருந்து பாரதப்பிரதமருக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டு விட்டது. இதே தீர்மானத்தை திட்ட லெட்டர் பேடில் அனைத்து கோட்டங்களிலிருந்தும், கோட்ட செயலாளர்கள் கையொப்பமிட்டு, பாரத பிரதமர், எரிசக்திதுறை அமைச்சர் ஆகியோர்களுக்கு அனுப்பி, அதன் நகலை இ.இ.எப்.ஐ. அகில இந்திய மையத்திற்கும் அனுப்பிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

காப்பீட்டுத்துறையில் அந்நிய முதலீட்டை 49 சதவீதத்திற்கு அனுமதிக்கும் அவசர சட்டமும், நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டுக்கான அவசர சட்டத்தையும் கண்டித்தும், அந்த இரண்டு அவசர சட்டங்களையும் திரும்பப் பெற வேண்டுமென நாடு முழுவதும் காப்பீட்டுத் துறை ஊழியர்கள் போராட்டக் களத்தில் இறங்க உள்ளனர். தமிழகத்தில் மாவட்ட அளவில் நடைபெறும் இயக்கங்களில் மின் ஊழியர் மத்திய அமைப்பைச் சார்ந்தவர்கள் கணிசமான அளவில் கலந்து கொள்ள செய்ய வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

மாநில பொதுத்துறை நிறுவனமான கூட்டுறவு சர்க்கரை ஆலை ஊழியர்கள் ஊதிய உயர்வு கோரிக்கையை முன் வைத்தும் அது சம்மந்தமாக அரசு அறிவித்ததை ஏற்க இயலாது என்றும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். அரசு போக்குவரத்து ஊழியர்கள் ஊதிய உயர்வு கோரிக்கைக்கான பேச்சு வார்த்தையை துவங்கி, முடித்து அறிவிப்பினை செய்திடுக என்ற முழக்கத்தோடு வேலை நிறுத்தத்திற்கு தயாராகிக் கொண்டுள்ளனர். இவ்விரண்டு இயக்கத்திற்கு ஆதரவாக மாநில சிஐடியு வழிகாட்டுதலின் அடிப்படையில் இயக்கத்திற்கு செல்ல வேண்டியுள்ளது.

## ஒப்பந்த தொழிலாளர்கள் பட்டியல் தயாரிப்பு

புனல் மின்சார உற்பத்தி, விநியோகம், பொதுகட்டுமான வட்டங்களில் நூற்றுக்கணக்கான ஒப்பந்த தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். மின்சார வாரியமோ மேற்கூறிய பிரிவுகளில் ஒப்பந்த தொழிலாளிகளை தொடர்ச்சியாக பணியமர்த்தி வேலை வாங்கிய போதிலும், அவர்களை ஒப்பந்த தொழிலாளிகளாக அங்கீகரிக்க மறுக்கின்றது. ஒப்பந்த தொழிலாளர்கள் மின் வாரியத்தில் பணியாற்றுகின்றார்கள் என்பதை ஏற்றுக் கொண்டு தான் அவர்களுடைய தினக்கூலியை ரூபாய் 120/- லிருந்து ரூ. 250/- ஆக உயர்த்தி வழங்கிய போதிலும் அவர்களை ஒப்பந்த தொழிலாளர்கள் என்று ஏற்பதிலிருந்து விலகி நிற்ப்பதை தொடர்ந்து கடைபிடித்து வருகிறது.

மத்திய அமைப்பபை பொருத்த வரையில் வாரியம் ஏமாற்றுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. உண்மையாக பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு உரிமைகளைப் பெற்றுத் தருவதிலிருந்து விலகி நிற்க முடியாது. அந்த அடிப்படையில் தான் மின் வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளிகளை அடையாளங்கண்டு பட்டியலிடுவது என்ற முடிவுக்கு வந்துள்ளோம். அதனடிப்படையில் தொடர்ந்து பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளரிடம் விபரங்களைப் பெறுவது, விபரங்களைப் பெறுவதற்குண்டான படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. விபரங்களைப் பெற்று திட்ட மையத்தில் வைத்துக் கொண்டு, அதன் விபரங்களை மட்டும் பட்டியலிட்டு மாநில மையத்திற்கு 2015 ஆம் ஆண்டு பிப்ரவரி 15 தேதிக்குள் அனுப்பி வைத்திட வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம். திட்டத்திலிருந்து அனுப்பப்படும் பட்டியலை ஒருமுறைத்தான் அனுப்பிட வேண்டும், தவணை முறையில் அனுப்பும் பட்டியல் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பட்டியல் எடுக்கும் போது மிகவும் கவனமாய் இருக்க கேட்டுக் கொள்கிறோம்.

## களப்பிரிவு ஊழியர்கள் பதவி உயர்வு

களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வை முறைப்படுத்தும் விதமாக 9.1.2014 ல் ஏற்பட்ட ஊதிய உயர்வு ஒப்பந்தத்தில் அமைக்கப்பட்ட குழுவிடம் இருந்து அறிக்கையைப் பெற்று அதை தொழிற்சங்கங்களுக்கு அளித்து கருத்தினை கேட்டிருந்தது. வாரியம் கொடுத்துள்ள ஆலோசனையில் இழப்புகளை சரி செய்து அதை ஏற்றுக் கொள்ளலாம் என்று நிலையில் மின் வாரியத்தில் உள்ள மத்திய அமைப்பு, தொழிலாளர் சம்மேளனம், தொழிலாளர் முன்னேற்ற சங்கம், ஐ.என்.டி.யு.சி., பொறியாளர் சங்கம், பொறியாளர் அமைப்பு ஆகிய அமைப்புகள் கூடிப் பேசி ஒரு பொதுக் கருத்தை உருவாக்கி அதனடிப்படையில் மின் வாரிய நிர்வாகத்தை அணுகுவது என்று முடிவு செய்தோம். அந்த அடிப்படையில் இந்த ஆலோசனையின் மீது மின் ஊழியர் மத்திய அமைப்பு கொடுத்த கருத்துக்களின் கடிதத்தை இத்தோடு இணைத்துள்ளோம். இக்கடிதத்தின் உள்ளடக்கத்தை ஊழியர்கள் மத்தியில் பரவலாக கொண்டு செல்ல வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

இதற்கிடையில் பி.எம்.எஸ். தொழிற்சங்கம் வணிக மேற்பார்வையாளரிலிருந்து முகவர் முதல் நிலை உள்ளிட்ட பதவி உயர்வுகளை வழங்குவதை நிறுத்தி வைக்க வேண்டும் என்று நீதிமன்றத்திடம் வழக்கு தொடர்ந்துள்ளது. நம்மைப் பொருத்த வரையில் பதவி உயர்வு எதையும் நிறுத்தக் கூடாது, இரு பிரிவு பதவி உயர்வு சம்மந்தமாக முடிவு எடுத்த பின்னர் அதனடிப்படையிலும், அதற்கு முன்னர் பழைய விதிகளின் அடிப்படையிலும் பதவி உயர்வை வழங்கிட வேண்டும் என்ற அடிப்படையில் நீதிமன்றத்தை நாடியுள்ளோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

## மின் வாரிய உழைக்கும் பெண்கள் மாநில மாநாடு

மின் வாரிய உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக் குழுவின் 8 வது மாநில மாநாடு 8.2.2015 அன்று விழுப்புரத்தில் நடத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. அதற்கான வரவேற்புக் குழு அமைக்கும் கூட்டமும், உழைக்கும் பெண்கள் மாநில குழு கூட்டம் நடத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. வரவேற்புக் குழுக்கூட்டம், மாநிலக் குழுக்கூட்டம், மாநாடு ஆகியவைகள் வெற்றிகரமாக அமைய கிளைகள் அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

## வள்ளூர் அனல் மின் நிலையத்தில் கிளை துவக்கம்

வடசென்னை அனல் மின் நிலையத்திற்கு மிக அருகாமையில் என்.டி.இ.சி.எல். மின் நிலையம் அமைந்துள்ளது. மத்திய பொதுத்துறை நிறுவனமான என்.டி.பி.சி. யிலும் தமிழ்நாடு மின் வாரியமும் சரிசமான பங்குதாரர்களாக இம்மின்நிலையத்தை அமைத்துள்ளனர். இம்மின் நிலையம் 1500 மெகாவாட் மின் உற்பத்தி திறன் கொண்டதாகும். இங்கு சுமார் 1000 க்கும் மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர் பணியாற்றுகின்றனர். அம்மின் நிலையத்திலிருந்து 375 க்கும் மேற்பட்டவர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். இந்நிலையில் அம்மின் நிலையத்தில் மின் ஊழியர் மத்திய அமைப்பின் 53 வது கிளையாக துவங்கப்பட்டுள்ளது. இதைப் பின்பற்றியே தூத்துக்குடி, கடலூர் போன்ற இடங்களில் உள்ள தனியார் மின் நிலையங்களிலும் மின் ஊழியர் மத்திய அமைப்பின் கிளைகளை துவங்க வேண்டியுள்ளது.

## மத்திய அமைப்பு, சிஐடியு விவசாயிகள் சங்கம், விவசாய தொழிலாளர் சங்கம் கூட்டு கருத்தரங்கம்

மின்சார சட்டம் 2003 ன் நச்சுத் தன்மையை மின் நுகர்வோர்கள், மின் வாரிய ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லும் வகையில் கூட்டு கருத்தரங்கம், சென்னை, திருச்சி, கோவை, திருவண்ணாமலை போன்ற மையங்களில் நடத்துவது என்றும் அதில் முதல் கட்டமாக திருவண்ணாமலையில் அப்படிப்பட்ட கூட்டு கருத்தரங்கத்தை நடத்துவது சம்மந்தமாக திருவண்ணாமலை கிளை தோழர்களோடு தொடர்பு கொண்டுள்ளோம். பொங்கலுக்கு பிறகு ஒரு நாள் குறிப்பிட்டு ஜனவரி மாத கடைசிக்குள் நடத்திடுவது என்று முடிவு செய்துள்ளோம்.

## உறுப்பினர் இறுதிப்படுத்துதல்

2014 ஆம் ஆண்டு இன்னும் சில தினங்களில் முடிவடையப்போகிறது. இந்நிலையில் இதுவரை மாநில மையத்திற்கு 20,000 உறுப்பினர்களுக்குண்டான விபரங்களே மாநில மையத்திற்கு வந்துள்ளது. 2013 ஆம் ஆண்டு எண்ணிக்கையாவது முடிக்க வேண்டுமானால் இன்னும் 4000 க்கும் மேற்பட்ட உறுப்பினர்களை சேர்க்க வேண்டியுள்ளது. இதில் குறிப்பாக வடசென்னை, தர்மபுரி, விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை போன்ற கிளைகள் 2013 ஆம் ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கையை முடித்தால் 2500 உறுப்பினர்கள் உடனடியாக உறுப்பினர் எண்ணிக்கையில் உயர்வு ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. ஸ்தாபன பலத்தோடு உள்ள இப்பெரிய கிளைளே ஆண்டு முடிவடையும் தருவாயில் கூட சென்ற ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கையை அடைய பெரும் இடைவெளியை வைத்துள்ளது என்பதை வருத்தத்தோடு சுட்டிக்காட்டிட வேண்டியுள்ளது.

இக்கிளைகளை கிளையின் பிரதான பணியாக உறுப்பினர் சேர்ப்புக்கு திட்டமிட்டு சென்ற ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கையை அடைந்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

அதே போல் திருச்சி மண்டலத்தில் பெரம்பலூர், கரூர், தஞ்சாவூர், நாகப்பட்டிணம் போன்ற கிளைகளும் சென்ற ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கையை இன்னும் அடையவில்லை என்பதை குறிப்பிட விரும்புகிறோம்.

கோவை மண்டலத்தில் கோவை தெற்கு, கோவை வடக்கு ஆகிய கிளைகள் சென்ற ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கையை அடையவில்லை, ஈரோடு மண்டலத்தில் சேலம் கிளை தவிர மற்ற கிளைகள் சென்ற ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கை அடைவதில் தேக்க நீடிக்கிறது. மேலே குறிப்பிட்ட கிளைகள் சென்ற ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கையை அடைந்தாலே 2013 ஆம் ஆண்டுக்கும், 2014 ஆண்டுக்கும் உள்ள இடைவெளி அகலும் என்பதை குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறோம். இக்கிளைகள் அனைத்தும் இவ்வாண்டின் மீதமுள்ள சில தினங்களில் முக்கிய பணியாக கொண்டு பணியாற்றி இவ்விடைவெளியை அகற்றிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

## தகவல் பரிமாற்றத்தில் தொழில் நுட்பத்தை பயன்படுத்துதல்

மாநில மையத்திலிருந்து நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு நிகழ்வுகள், முடிவுகள் சுற்றறிக்கையாக அனுப்பப்படுகிறது. அது மட்டுமல்லாமல், வாரியத்தின் பல்வேறு நிகழ்வுகள், பதவி உயர்வுக்கான பேனல், திட்ட ஒதுக்கீடு போன்றவைகள் சுற்றறிக்கையாக அனுப்பப்படுகின்றன. இதுவரை, இவை போன்ற சுற்றறிக்கைகள் செயற்குழு உறுப்பினர்கள் வரை அனுப்பப்படுகின்றன, மத்திய அமைப்பின் நிகழ்வுகளை பரவலாக கொண்டு செல்ல பொதுக்குழு உறுப்பினர் வரை சுற்றறிக்கை அனுப்ப வேண்டுமென்ற கோரிக்கை தொடர்ந்து எழுந்து கொண்டுள்ளது. மையமும் சில சுற்றறிக்கைகளை பொதுக்குழு உறுப்பினர்கள் வரை அனுப்புகின்றோம். ஆனால் அனைத்து சுற்றறிக்கைகளும் பொதுக்குழு உறுப்பினர்கள் வரை அனுப்ப வேண்டிய அவசியமும் உள்ளது.

பொதுக்குழு வரை சுற்றறிக்கை அனுப்புவதில் பெரும் செலவும், ஊழியர்களின் பணியும் தேவைப்படுகிறது. இருப்பினும் கூட சில சுற்றறிக்கைகள் பொதுக்குழு உறுப்பினர்கள் வரை அனுப்பப்படுகிறது. இதில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம் செய்தியை பரவலாகவும், விரைவாகவும் கொண்டு செல்வதற்கும் ஏதுவாகும். அந்த அடிப்படையில் சுற்றறிக்கையையும், தகவல்களையும் மின்னஞ்சல் மூலம் அனுப்புவதால் செலவும், மனித உழைப்பும் குறைவதோடு செய்திகள் வேகமாக சென்றடைய வாய்ப்புண்டு, அதனால் மாநில நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் உடனடியாக மின்னஞ்சல் முகவரியை ஏற்படுத்தி அதை மாநில மையத்திற்கு தெரியப்படுத்திட வேண்டுகிறோம். மின்னஞ்சல் மூலம் அனுப்புவதால் செலவும், மனித உழைப்பும் குறைவதோடு செய்திகள் வேகமாக சென்றடைய வாய்ப்புண்டு.

மாநில நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் உடனடியாக மின்னஞ்சல் முகவரியை ஏற்படுத்தி அதை மாநில மையத்திற்கு தெரியப்படுத்திட வேண்டுகிறோம்.

மின்னஞ்சல் முகவரிகள் பொதுக்குழு உறுப்பினர்கள் வரை உருவாக்கி அனுப்புவதற்கு காலதாமதம் ஏற்பட வாய்ப்புள்ளது என்பதையும் கணக்கில் கொண்டு முதலில் மாநில நிர்வாகிகள் தன்கோ, கிளைக்கோ இ.மெயில் முகவரிகளை உருவாக்கி உடனடியாக மாநில மையத்திற்கு தெரிவித்த உடன் சுற்றறிக்கைகள் தபாலில் அனுப்புவது நிறுத்தப்பட்டு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும். தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதை அடுத்த கட்டமாக கிளைச் செயலாளர்களும், கோட்ட செயலாளர்களும் மின்னஞ்சல் முகவரிகளை உருவாக்கி, மாநில மையத்திற்கு அனுப்பிட வேண்டுகிறோம். கிளைச் செயலாளர்களும், கோட்டச் செயலாளர்களும்

இ.மெயில் முகவரிகளை உருவாக்கி முடித்த பின்னர் அவர்களுக்கும் சுற்றறிக்கைகள் தபால் மூலம் அனுப்புவது நிறுத்தப்பட்டு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும். இத்திட்டம் முழுவதையும் அமலாக்க மூன்று மாத காலத்திற்குள்ளே முடிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**வெண்மணி நினைவாலய நிதி**

வெண்மணி கட்டிடப் பணிகள் முழுமையடைய செய்வதற்கு மேலும் நிதித் தேவை என்றும், அத்தேவையை பூர்த்தி செய்ய நிரந்தர தொழிலாளர்கள் மத்தியில் ரூ. 50/- நிதியாக வசூலித்து அளித்திட வேண்டும் என்ற முடிவின் அடிப்படையில் அதற்குண்டான ரசீது புத்தகங்கள் கிளைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இது வரையில் மாநில மையத்திற்கு வந்த தொகை மிகக் குறைவு. இருப்பினும் வெண்மணி நினைவாலாயப் பணிகளுக்கு உதவுகின்ற வகையில் மாநில மையத்திலிருந்து தொகையை அளிப்பது என்றும் அதை ஈடுசெய்ய கிளைகளிலிருந்து நிதி வசூலை வேகப்படுத்தி பெருவதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதனால் கிளைகள் வெண்மணி நினைவாலாயத்திற்காக வசூலிக்கப்பட்ட தொகையை மாநில மையத்திற்கு உடன் அனுப்பி வைத்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

குடும்ப நல பாதுகாப்பு குழுக்கூட்டத்தையும், ஒப்பந்த தொழிலாளர்கள் குழுக்கூட்டத்தையும் 21.1.2015 அன்று நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தோழமையுள்ள



**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்

## அவசர செய்திகள்

★ கணக்கீட்டாளர் இரண்டாம் நிலையில் இருந்து கணக்கீட்டாளராக பதவி உயர்வு என்பது அடுத்த வாரம் இறுதிக்குள் வெயியிடப்பட உள்ளது.

★ மீதமுள்ள 14 கோட்டங்களுக்கு உதவி நிர்வாக அலுவலர் பதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதுவும் அடுத்த வாரத்திற்குள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

★ திட்டத்திற்கு ஒரு நிர்வாக அதிகாரி என்ற அடிப்படையில் ஏற்பட்டுள்ள 42 நிர்வாக அலுவலர் பதவியை நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதில் முதல் கட்டமாக 18 அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்க வேகமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# ஒப்பந்த தொழிலாளர் விபரம் சேகரிக்கும் படிவம்

1. பெயர் :
2. கணவர் / தகப்பனார் பெயர் :
3. கல்வித்தகுதி :
4. பிறந்த தேதி / வயது :
5. பணியாற்றும் பிரிவு :
   கோட்டம் :
   திட்டம் :
6. ஒப்பந்த ஊழியராக பணியில் சேர்ந்த தேதி :
7. பணியில் சேர்ந்த தேதியில் இருந்து தொடர்ந்து
   பணிபுரிபவரா? :
   இல்லை என்றால் பணிக்குவராத விபரம் :
8. உயர்நீதிமன்ற தீர்பின் பட்டியலில்
   தங்களது பெயர் உள்ளதா? :
9. வேறு ஏதேனும் நீதிமன்ற தீர்ப்பு பெற்றிருந்தால் அதன் விபரம் :
   தொழிலாளர் ஆய்வாளர் அளித்த தீர்ப்பில் உள்ளவரா?
   ID 106 ல் தங்களது பெயர் உள்ளதா? :
10. தேவையின் அடிப்படையில் ரூ. 120/- நாட் கூலியாக பெற்று
    பணியாற்றி வருபவரா? :
    பணியில் சேர்ந்த தேதி :
11. எந்த தேதியிலிருந்து ரூ. 120/- நாட்கூலியாக பெற்று
    பணியாற்றி வருகிறீர்கள் :
12. எந்த பட்டியலிலும் இல்லாமல் பணிபுரிபவரா? :
13. ஏற்கனவே நிர்வாகத்தால் அடையாளம் காணப்பட்டு
    தாங்கள் பெயர் விடுபட்டு உள்ளதா? :
14. என்ன காரணத்தால் தங்களது பெயர்
    நிர்வாக பட்டியலில் இடம் பெறவில்லை? :

**கையொப்பம்**